என்மொழி

மலர் -1 இதழ் - 1 ஜூன் 2026

மியம்மா தமிழ் மாணவர்களின் படைப்புகள் - சிறப்பிதழ்





என்மொழி

மியம்மா தமிழ் மாணவர்களின் படைப்புகள் – சிறப்பிதழ்

மலர் : 1	*இதழ் : 1*	*ஜூன், 2026*

இதழாசிரியர்க்குழு

திரு.கோ.க.கருணாநிதி, திரு,கோ.க.சந்திரசேகர்,
திரு.கோ.க.இளங்கோவன்

சிறப்பிதழின் ஆசிரியர்

திரு. ஜெ.கார்த்திக், தமிழ்நாடு, இந்தியா

வெளியீடு

தமிழர் அறநெறிக் கழகம்,

யாங்கோன், மியம்மா

அனைவருக்கும் வணக்கம்!

தமிழர் அறநெறிக்கழக வெளியீடான ‘என்மொழி’ என்னும் இதழ், மியம்மா திருமண்ணில் பூக்கும் தமிழ்ப்படைப்புகளை வெளிக்காட்டப் பயன்படவுள்ளது. இதன் முதன் வெளியீடே தமிழர் அறநெறிக்கழகப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் கன்னிப்படைப்புகளைத் தாங்கி வெளிவருகிறது. இந்த ஜூன் மாதம் 6 முதல் 10ஆம் தேதிவரை தமிழர் அறநெறிக்கழகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் உதவிப்பேராசிரியர் ஜெ.கார்த்திக் அவர்கள் நிகழ்த்திய மாணவர் – ஆசிரியர் தமிழ்ப்பயிலரங்கில் மொழி – இலக்கியப்பயிற்சி பெற்ற நம் பிஞ்சுத்தமிழ்க்குழந்தைகளின் முதல் இலக்கிய முயற்சிகள் இவ்விதழில் நிறைந்துள்ளன. இவ்விதழ் இனி தமிழ் சார்ந்த ஆக்கப்பூர்வமான படைப்புகளுடன் வெளிவரும் என்பதற்கு இச்சிறப்பிதழ் கட்டியம் கூறுகிறது.



மியம்மா தமிழன்னை வணக்கம்

மியம்மா திருமண்ணில் முழங்கும் செந்தமிழே
என்றும் நிலையென நீ வாழ்க!
ஐராவதிக் கரையில் அழகிய தமிழோசை
சேர்க்கும் இனியவள் நீ வாழ்க!
இரங்கூன் பகானென்று எங்கும் நிறைந்தவளே!
வளமார் இம்மண்ணில் தமிழின முகவரியே!
நறுந்தமிழாய் எங்கும் நீ நில்க!
உலகளந்தாய், என்றும் நீ வெல்க!
சிலம்பும் குறளுமென ஒலிக்கும் இலக்கியங்கள்
எங்கள் மனதிலுற அருள் வேண்டும்!
உனது பேரொளியில் விளையும் புதுமையுடன்
இனிய வாழ்வுபெற வழி தாரும்!
கற்ற தமிழ்மொழி நம் உற்ற துணையென்றே
கொற்றப்பறைகொட்டி வெற்றி முழங்குவோம்!
சீர்மிகு செம்மொழியே! சிறக்கின்றோம் தாழ் பணிந்தே!



ஜெ.கார்த்திக்,

தமிழ்நாடு

இரு நண்பர்களின் கதை

ஒரு கிராமத்தில் இரு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் ராமு, இன்னொருவன் பெயர் கபிலன். ராமு தன்னம்பிக்கையும் பண்பாடும் உடையவன். ஆனால் அவன் கொஞ்சம் ஏழ்மை உடையவன். கபிலனோ கொஞ்சம் வசதி வாய்ப்புடையவன். அவனுக்கு தான் பணக்காரன் என்ற ஆணவம் உண்டு. கபிலனோ ராமுவை ஏளனப்படுத்தி மகிழ்ச்சி அடைவான். ஒருநாள் அவர்களின் பள்ளியில் ஓவியம் வரையச் சொன்னார்கள். ராமுவிற்கு ஓவியம் வரையும் திறமை உண்டு, கபிலனுக்கோ ஓவியம் வரையத் தெரியாது. ராமு வரைந்த ஓவியமோ எளிமையாகவும், அழகாகவும் இருந்தது. கபிலனோ ஓவியம் வரைய முயற்சி செய்தான். ஆனால், அவனால் முடியவில்லை. அப்பொழுது கபிலனின் பணக்கார நண்பர்களும் உதவவில்லை.

ராமு தன் கடமையைச் சரியாகச் செய்து விட்டான். கபிலன் தன் கடமையைச் செய்ய இயலாமல் தவித்தான். அப்பொழுது நண்பா என்று அழைத்த ஓசை கபிலனின் காதில் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்த பொழுது ராமு நின்றான். உனக்கு என்ன உதவி வேண்டும் என்னிடம் கேள் என்றான். கபிலனுக்கோ மிகப்பெரிய ஆச்சர்யம். ராமு சொன்னபடியே கபிலன் வரைந்தான். வரைந்த ஓவியமும் மிக அழகாக வந்தது. அத்தருணத்தில்தான் கபிலன் உணர்ந்தான், பணத்தைவிட நல்ல குணமும் பிறரை ஏளனப்படுத்தாதிருத்தலும் தான் முக்கியம் என்று. எனவே, பணக்கார நண்பர்களை விட நல்ல நண்பர்கள் தான் முக்கியம் என்று அவன் உணர்ந்தான். பின்னர் அவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள் ஆனார்கள். இதே போல் நாமும் பணக்காரன் நண்பர்களை விட நல்ல குணமுடைய நண்பர்களோடு தான் பழக வேண்டும். ஏனென்றால் நமது மீது உண்மையான அன்பு செலுத்துவர்கள் தான் நல்ல நண்பன். ஆபத்தில் உதவுபவன்தான் உண்மையான நண்பன்.



ம.ஸ்ரேயா (அகவை 16)
டல்லா

புத்திசாலித்தனம்

ஒரு காட்டில் குரங்கு, முதலை ஆகியவை இருந்தன. முதலை ஒன்று குரங்கு இருந்த மரத்தை எட்டிப் பார்த்து ஒன்று சொன்னது. குரங்கே! குரங்கே! என் வீட்டுக்கு நீ வருகிறாயா என்றது முதலை. வருகிறேன் என்றது குரங்கு. முதலை சொன்னது முதுகு மீது

ஏறிக்கொள் என்றது. முதலை குரங்கைக் கொல்ல முயன்றது. குரங்கு, நண்பா ஏன் என்னைக் கொல்ல வருகிறாய்? உனக்கு என்ன வேண்டும்? என்றதற்கு முதலை, உன்னுடைய இதயம் வேண்டும் என்றது. இதயம் எதற்கு உன் இதயத்தை நான் தின்பதற்கு. நண்பா கொஞ்சம் இரு என் இதயத்தை மரத்தின் மீது விட்டு விட்டேன் என்றது குரங்கு. அட முட்டாள் முதலையே யாராவது மரத்தில் வைப்பார்களா ஏமாந்து போனது முதலை. ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் புத்திசாலித்தனமாகத் தப்பித்துக் கொள்க.



அழகன் (அகவை 13)
நந்தாகொன்

நல்ல நண்பன்

ஓர் ஊரில் சூரியன், கண்ணன் என்ற இரு நண்பர்கள் இருந்தார்கள். சூரியன் நல்ல பையன். பாடங்களை நன்றாகச் செய்வான். எப்பொழுதும் தூய்மையாக இருப்பவன். ஆனால் கண்ணன் சோம்பேறி. எப்பொழுதும் விளையாடிக்கொண்டே இருப்பான். பாடங்களைச் செய்யமாட்டான். சூரியனுக்கு எல்லாரையும் பிடிக்கும் சூரியன் கண்ணன் மீது ஒருமுறை கோபப்பட்டான். சூரியன் கண்ணனை நீ அப்படி செய்யாதே நல்லா படி அப்போதுதான் உனக்கு நல்ல வேலை கிடைக்கும். நீ இப்படியே இருந்தா பெரியவன் ஆனாலும் யாரும் உன்னை மதிக்க மாட்டார்கள் என்றான். கண்ணன் சற்று யோசித்தான். என் நண்பன் என் நல்லதுக்காகத் தான் சொன்னான். சூரியன் பேச்சைக் கேட்டு கண்ணன் நன்றாகப் படித்தான். ஆசிரியர் கொடுத்த பாடங்களைத் தினமும் செய்தான் வீட்டிலேயும் நல்ல பையனாக இருந்தான். கண்ணனுக்கு எல்லோரையும் பிடிச்சிருந்தது. கண்ணன் அத்தினம் ரொம்ப சந்தோஷமாக இருந்தான். கண்ணன் சூரியனுக்கு நன்றி கூறினான். சூரியனும் கண்ணனும் முன்பு போலவே இருந்தார்கள்.

"யாருடனும் உண்மையாக, நல்லவனாகப் பழகவேண்டும்"



சுகுணா (அகவை 22)
கமாயுட்

விடா முயற்சி

கண்ணன் ஒரு சோம்பேறிப் பையன். கண்ணன் வீட்டுக்கு முன் தென்னை, வாழை மற்றும் கொய்யா மரங்கள் இருந்தன. பூச்செடிகளும் இருந்தன. ஒரு நாள் மழை பெய்ததால் அவன் குடைபிடித்துப் பள்ளிக்குச் சென்றான். அவனுக்கு அவனுடைய பொம்மைகளுடன் விளையாடுவது மிகவும் பிடிக்கும்.

அவனுக்கு எலி, பல்லி என்றால் பயம். ஆனால் அவன் பாடம் மட்டும் படிக்க மாட்டான். அவனுக்கு மழை பெய்தால் மெத்தையில் படுக்கப் பிடிக்கும். மிதிவண்டி மற்றும் இரண்டு சக்கர வாகனங்களில் பயணம் செய்யப்பிடிக்கும். அவனுக்குக் கைக்கடிகாரமும் பிடிக்கும். அதை வாங்கி தரச் சொல்லி அம்மா அப்பாவிடம் கேட்டான். ஆனால் அவனின் அம்மாவும் அப்பாவும் இந்தப் பரிச்சையில் நல்ல மதிப்பெண் வாங்கினால் உனக்குக் கைக்கடிகாரம் வாங்கித் தருவேன் என்று கூறினார்கள்.

ஆனால் அவன் நல்லாப் படிக்காததால் அவனுக்கு மதிப்பெண் முட்டைதான் கிடைக்கும். அதனால் அவன் பள்ளியில் அவனை முட்டை என்று கேலி செய்தார்கள். அதனால் அவன் இம்முறை நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண் வாங்க முடிவெடுத்தான். அதனால் சன்னல் பக்கத்தில் கதவு முன்னாடி இருந்த நாற்காலியில் படிப்போம் என்று படித்தான். ஆனால் படிப்பு அவனின் மண்டையில் ஏறவில்லை. அதனால் அவன் பானையில் தண்ணீரில் குடித்துவிட்டுப் படிப்போம் என்று குடித்து வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

அப்போது ஒரு சிலந்தியைப் பார்த்தான். அது மேலே ஏற முடியாமல் அவதிப்படுவதைப் பார்த்தான். ஆனாலும் அந்த சிலந்தி முயற்சியைக் கைவிடவில்லை. முயற்சி பண்ணி அது மேலே போய் விட்டது. அதைக் கண்ட கண்ணனும் அதைப்போல் முயற்சி செய்து படித்தான். அதனால் அவனுக்குப் பரிச்சையில் நல்ல மதிப்பெண் கிடைத்தது. கைக்கடிகாரமும் கிடைத்தது. அதனால் கண்ணன் ''விடாமுயற்சி விஸ்பரூப வெற்றி'' என்று உணர்ந்தான்.



திவ்யா (அகவை 14)
டல்லா

சுவையான மாம்பழம்

நான் மரத்தின் கீழே ஒருநாள் பாயை விரித்தேன். அந்தப் பாயில் ஒரு தலையணையைப் போட்டுப்படுத்தேன். அப்பொழுது அந்த மரத்தின் மேலே இருந்து ஒரு மாம்பழம் கீழே விழுந்தது. அப்பொழுது

நான் எழுந்து மாம்பழத்தை நீரில் விட்டுக் கழுவினேன். அப்பறம் வெட்டித் தின்றேன்.



ரேணுகா (அகவை 13)
நந்தாகொன்

விலங்கும் நானும்

நான் என் வீட்டில் இருக்கும் கண்ணாடியைத் தவறுதலாக உடைத்த பொழுது என் வீட்டில் இருக்கும் பூனை மீது பட்டது. அப்போது என் அம்மா என்னை சிறிய மரக்குச்சியால் அடித்தார். அப்பொழுது நான் கோபப்பட்டு என் வீட்டு மாடிக்கு ஓடிப் போனேன்.

அங்கிருந்த ஊஞ்சல் மேலே உட்கார்ந்து இருந்தபோது என் அப்பா எனக்கு ஒரு நாய் குட்டி வாங்கிட்டு வந்தார். அப்பொழுது நான் மாடியிலிருந்து வரும் பொழுது கத்தி என் கையில் கீறி விட்டது. மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகளும் பிரச்சனைதான் எனக்கு.



சரவணன் (அகவை 14)
ஞவுந்தொன்பின்

தமிழ் மன்னர்கள்

பாரில் பற்பல மன்னர்கள் இருந்தார்கள். பற்பல ஆட்சிகள் இருந்தன. தமிழர் ஆட்சியைப் பற்றி நிறைய வரலாறுகள் இருக்கின்றன. தமிழ் மன்னர்களைப் பற்றி நிறைய நூல்களும் உள்ளன. தன்னைப்பற்றி யோசிக்காமல் மக்களைப் பற்றி யோசிப்பவனே மன்னன். தரணியில் உள்ளவரை மக்களுக்காக வாழ யோசிப்பவரே மன்னன். ஒரு நல்ல மன்னன் ஆக, அழகோ செல்வமோ தேவை கிடையாது. துல்லியமாக யோசிக்கும் அறிவும், எதையும் துணிந்து செய்யக்கூடிய மனப்பான்மையும் தான் முக்கியம். ஒரு நல்ல வீரனுக்கு அழகு தன்னம்பிக்கை தான். அது நம் தமிழர்களின் குருதியில் ஊறி உள்ளது. இவை எல்லாம் நம் தமிழ் இனத்தின் அடையாளம். தமிழ் இனத்தில் வீரர்களே.... பெருமை கொள்வோம்.



அறவேணி (அகவை 16)
டல்லா

என் பாப்பா கதை

ஒரு பாப்பா விளையாடிக்கொண்டு இருந்தது. அப்பொழுது நாற்காலியைத் தட்டி விட்டது. நாற்காலியின் மேல் குவளை இருந்தது. பாப்பா தட்டி விட்டதில் புத்தகத்தில் குவளைத் தண்ணீர் பட்டு நனைந்து விட்டது. அப்போது அண்ணன் எழுதுகோல் வாங்க கடைக்கு போயிருந்தான். அப்போது தொலைபேசியும் கீழே விழுந்தது. அப்போது கையால் எட்டி எடுக்கும் போது அம்மாவின் குரல் காது கேட்டதும் திரும்பிப் பார்க்கையில் நாற்காலியை இடித்து விட்டது. பாப்பாவுக்கு நேரம் சரியில்லை.



வி.தெய்வத்திருமகள் (அகவை 15)
டல்லா

தொலைக்காட்சிப் பைத்தியம்

ஒரு பாப்பா கொஞ்சம் படித்தபின் காத்தாடத் தூங்கியது. அப்பொழுது பசி வந்துவிட்டது. பாப்பா நாற்காலியின் உட்கார்ந்து தொலைக்காட்சியைப் பார்த்துச் சாப்பிட்ட போது, அப்போது சின்னத் தாள் ஒன்று மேலே இருந்து வந்து விழுந்தது. தொலைக்காட்சியைப் பார்க்கும் ஆவலில் தாளையும் தின்றுவிட்டது.



மோனிஷா (அகவை 12)
யாங்கோன்

அண்ணன் கதை

அண்ணன் புத்தகத்தில் இருந்த தாளைக் கிழித்துக் கட்டிலில் வைத்து எழுதுகோலால் அதில் வரைந்தான். வரைந்த தாள், மின்விசிறியால் பறந்து கீழே விழுந்தது. அண்ணன் கீழே விழுந்த தாளை எடுத்துத் திரும்பியும் வரைந்தான். வரைந்து முடித்ததும் தூங்கினான். பிறகு தன்னுடைய படம் பார்த்துக் கண்விழித்ததும் நாயுடன் விளையாடினான். அவனுக்கு அப்படி ஒருநாள் கடந்து போனது.



க.கஸ்தூரி (அகவை 15)
டல்லா

புலவர்

முற்காலத்தில் புலவர் ஒருவர் இருந்தார். அவர் கவிதை, ஓவியம், எழுதுபவர். அவர் எத்தகைய முயற்சியும் இல்லாமல் வீட்டிலேயே இருந்தார். அவருடைய முயற்சியின்மைக்குக் காரணம் அவருடைய நண்பர்கள் ஆவர். அவர்கள் புலவரை முயற்சி செய்ய விட மாட்டார்கள். ஏனென்றால் புலவர் முன்னுக்கு வருவதை விரும்பவில்லை. ஒரு நாள் அந்த ஊருக்கு மன்னர் ஒருவர் வந்தார். அவர் ஒரு சிறந்த புலவரைத் தேடினார். அப்போது ஊரில் உள்ள அனைவரும் இங்குப் புலவர் இல்லை என்று கூறினார். அச்சமயத்தில் புலவர் ஊர் எல்லைக்கு வந்தார். அவர் ஊர் மக்கள் பேசியதைக் கேட்டார். அந்தக் கூட்டத்தில் நண்பர்கள் தனக்கு முன்பிருந்தே கூறினர். அதைக் கண்ட புலவர் மனம் வருந்தினார். அவர் சிந்தித்த பிறகு என் தோல்விக்குக் காரணம் என் நண்பர்கள் தான். இப்போது புரிந்தது. என் நண்பர்களிடம் நான் ஒரு சிறந்த புலவராகத் தோன்றுவேன் என்று முடிவு செய்தார். பல புதிய நூல்களை எழுதினார். அதைப் பார்த்த நண்பர்கள் கோபம் கொண்டனர். புலவரிடம் தோற்றோம் என நினைத்தனர். இந்தக் கதையின் முக்கியச் செய்திகள் என்னவென்றால், யாரையும் பார்த்து உடனே நம்பக் கூடாது, நல்லவரையும் சந்தேகம் படக்கூடாது, ஒருவரை அதிகம் நம்பினாலும் தவறு, ஒருவரைக் காரணிமில்லாமல் சந்தேகப்படுவதும் தவறு.



ம. ஐஸ்வர்யா (அகவை 14)
டல்லா

என் நேரங்கள் எனக்காக!

ஒரு விடுமுறை நாள் அன்று வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தேன். ஓய்வெடுப்பது சலிப்புத் தட்டியதால் ஒரு நல்ல திரைப்படம் பார்க்க விரும்பினேன். திரைப்படத்தைத் தேர்ந்தெடுக்க முகநூலில் திரைப்படங்களின் விமர்சனங்களைப் பார்த்து அதை வைத்து முடிவெடுக்க நினைத்தேன்.

முகநூலைத் திறந்தவுடன் முதலில் பார்த்த பதிவு, புதிய விண்கோள் ஒன்றை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டார்கள் என்று! எனக்கு ஆச்சரியம். பேரண்டத்தில் எவ்வளவு புதிர்கள் அண்டத்தின் எல்லை வரை சென்று ஆராய ஆசை கூட நினைத்தது அகத்தில்.

கீழே இன்னொரு பதிவு. 200 பயணிகளுடன் பறந்து சென்ற விமானம் விபத்து! என் உள்ளம் உறைந்து போனது. 200 குடும்பங்களின் மன வருத்தத்தை நினைக்கும்போது மனம் படபடத்துப் போனது. உணர்ச்சியைக் கட்டுப்படுத்த பதிவைத் தாண்டி விட்டேன். மற்றொரு பதிவு சோழகாலச் செப்பேடுகள் அயல்நாட்டில் இருந்து இந்தியாவிற்குத் திரும்பின என்பதை! இந்தப் பதிவைப் பார்த்ததும் மாட்சிமிகு தமிழினத்தை நினைத்துப் பெருமைப்பட்டேன். இந்தச் செய்தியை அலைபேசியில் உள்ள அனைத்துச் சமூக ஊடகங்களிலும் பகிர்ந்தேன். பகிர்ந்து முடித்துப் பெருமையோடு பதிவைத் தாண்டினேன்.

அடுத்தது மியம்மாவின் பகோ மாநிலத்தில் கனத்த மழையால் வெள்ளத்தில் மக்கள் அவஸ்தை, எனக்குள்ளே ஒரு பயம் நாம் நினைத்தாலும் தடுக்க முடியாதது இயற்கை சீற்றம். அதனால் மாரியைப் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று நினைத்துக் கொண்டே பதிவைத் தாண்டினேன்.

எனது தாய், தந்தை ஆகியோர் அலைபேசிப் பயன்பாடு போதும் என்றனர். திரைப்படம் பார்த்து நேரத்தைக் கழிக்க நினைத்தேன். ஆனால் முகநூலில் இந்த நான்குவிதப் பதிவுகள் எனக்குப் பல உணர்வுகளைக் கொடுத்துத் திரைப்படம் பார்த்தது போல் மனம் மாறிவிட்டது. ஆனால் என் அகம் என்னை பார்த்து கேட்கிறது என்ன பயன்? என்று. இவற்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் நம்மால் எதை மாற்ற முடியும்? நாமும் சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்றால் நாம் படித்ததை வைத்து நம்மை நாம் முதலில் செதுக்கிக் கொள்ள வேண்டும். ஆகையால் எனது நெருங்கிய நண்பன் தேனீரோடு அருகில் இருக்கும் நூலகத்திற்குப் புறப்பட்டு விட்டேன். நூலகத்தில் எனக்கு மிகவும் பிடித்தமான அறிவியல் வானவியல் சார்ந்து படிக்கத் தொடங்கினேன். எனது நேரங்கள் எனக்காகப் பயன்பட்டன. நான் சமுதாயத்தில் மாற்றத்திற்குக் காரணமாக இருப்பேன் என மனதில் ஒரு நம்பிக்கை பிறந்தது.



அருண் (அகவை 19)
டல்லா

ஓர் ஊரில்...

ஓர் ஊரில் ஒரு மனிதன் தனது குதிரையில் சென்று அரிசி வாங்கிவரப் போனான். குதிரை, மனிதனோடு உப்பு மூட்டையையும் சுமந்து போனது. வழியில் சிறிய ஆறு ஒன்று இருந்தது. குதிரை ஆற்றைத் தாண்ட யோசனை செய்தது. உப்பு மூட்டையைச் சுமந்து ஆற்றின் உள்ளே இறங்கிப் போனது. சந்தைக்குப் போய் உப்பு மூட்டையைக் கொடுத்து அரிசி ஒரு மூட்டையைச் சுமந்து வீட்டுக்குச் சென்றது. மனிதன் அரிசி மூட்டையை எடுத்துக் கோழிகளுக்கு அரிசி போட்டான். மேலும், அங்கு உள்ள நாயை வீட்டைப் பாதுகாக்க விட்டுப் புல் அறுக்கக் காட்டுக்குப் போனான். மனிதன் காட்டிற்குள் போனதும் பெரிய மரங்கள், யானைகள், பூனைகள், குருவிகள், காகங்கள், அன்னங்கள், மைனாக்கள் எல்லாம் வீட்டுக்குள் இருந்தன. மனிதன் விலங்குகளைப் பார்த்துப் புல் அறுத்து வீட்டுக்குச் சென்றான். வீட்டில் மாட்டிற்குப் புல் கொடுத்து, ஆடுகளுக்கும் புல் போட்டு, தன் அழகான குதிரைக்குப் புல் போட்டு, அந்த மனிதன் வீட்டுக்குள் நுழைந்து உணவு சப்பிட்ட பின்னர் உறங்கினான். இந்தக் கதை மூலமாக உணர்வது என்னவென்றால், தினம் வேலை செய்ய வேண்டும். தன் வீட்டில் இதர விலங்குகளுக்குத் தினமும் உணவு கொடுத்து விலங்குகளை நிம்மதியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். விலங்குகள் நிம்மதியா இருந்தால் நாமும் நிம்மதியாக இருக்கலாம். உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும்.



கா.அஷோக் (அகவை 14)
ஞவுந்தொமின்

நண்பர்

சிறுவயதிலிருந்தே எனக்கு இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். நான் எங்கு சென்றாலும் அவர்களுடன் செல்வேன். நான் தவறு செய்யும் போது அவர்களிடம் சொல்வேன். அவர்கள் எனக்கு எல்லாவற்றிலும் உதவியானார்கள். என் அம்மாவுக்குப் பிறகு நான் அவர்களைத் தான் அதிகமாக நேசிக்கிறேன். என்னைப்பொருத்தவரை மாதாவுக்கு அடுத்த வரிசையில் நண்பன்தான்!



ஹரிசங்கர்
டல்லா

மழைக்காலம்

என் பெயர் சஞ்ஜேகுமார். நான் ஒரு பள்ளி மாணவர். நான் தினம் அதிகாலையிலேயே படுக்கையில் இருந்து எழுந்திருப்பேன். பல் துவக்குதல் முதலான காலைக் கடமைகளை உடனடியாக முடித்திடுவேன். பின்பு பள்ளிக்குச் செல்கிறேன். ஒரு நாள் நான் பள்ளிக்குச் செல்லும் முன் மழை பெய்தது. அதனால் என் அம்மா என்னைக் குடை எடுத்துவிட்டுப் போ என்று சொன்னார்கள். அதனால் நானும் எடுத்துப் போனேன் அந்த வழியில் ஒரு பாம்பு ஒரு கோழிக் குஞ்சை விரட்டியது. அப்போது அந்த வழியில் வந்த ஒரு நாய் பாம்பைப் பார்த்துக் குரைத்தது. அதோடு அந்தக் கோழி தப்பித்தது. அதோடு நானும் பள்ளிக்குச் சென்றேன். பள்ளியில் ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் பாடத்தைப் புத்தகத்தில் எழுதினேன். பள்ளியில் வீட்டுக்குச் செல்லும்போது நான் ஒரு பூனையைக் கண்டேன். அந்தப் பூனையை நான் வீட்டுக்குக் கூப்பிட்டுப் போனேன். அது என் வீட்டுக்கு வந்ததும் ஒரு எலியைக் கண்டபோது அது அந்த எலியை விரட்டியது. அது அப்படியே எலிகளை விரட்டி விரட்டி எங்கள் வீட்டுக்கே பாதுகாப்பாக மாறியது.



சஞ்ஜேகுமார் (அகவை 14)
ஞுவுந்தொம்பின்

நூல்

உயர்ந்த நிலை எது என்று நம்மை உணர வைக்கவும், உடலையும் உள்ளத்தையும் செம்மையாக்கவும், காட்டுமிராண்டியை மனிதனாக்கவும், காட்டுவாசியை அறிஞனாக்கவும், கோபம் தணிக்கவும், கொள்கைகளை அறியவும், இன்னல் நீக்கி இன்பம் பெறவும், மேலும் உயரவும், வேதனைகள் நீங்கி விவேகம் பெறவும், குற்றவாளியைத் திருத்தவும், மனக்கவலையை நீக்கவும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் விஞ்ஞானியின் வளர்ச்சிக்கும், எடுத்த செயல் முடிக்கவும், ஏணி போல் உயரவும், அறிவு வளரவும், அறிஞர்களை அறிந்திடவும், அறிஞராக உயர்ந்திடவும், வாழ்க்கைக்கு வழிகாட்டியாக வாழவும் என இவை அத்தனையும் ஒன்றால் மட்டும் செய்ய முடியும் என்றால் அதன் பெயர்தான் நூல். இந்த உலகத்தில் மறைந்து போன மிகப் பெரிய அறிஞர்களுடன் பேச வேண்டும் என்றால், நூலகத்திற்குச் செல்லுங்கள். அவர்களுடைய நூல்களைப் படியுங்கள். என்னைத் தேடி நீங்கள் வந்தால் உன்னைத் தேடி உலகம் வரும் என்று நூல் கூறுகிறது.



திவ்யா (அகவை 14)
டல்லா

நல்லதே நடக்கும்

ஒரு நாள் மாலை ஒரு தாத்தா தன் பேரனுக்கு நீதிக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார். அதில், நம்மிடையே எப்பொழுதும் இரு விலங்குகள் போன்ற குணங்களுடன் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. ஒன்று பண்பு, பாசம், நேசம், மனிதத் தன்மை, உண்மை போன்ற மிகவும் நல்ல குணங்கள். மற்றொன்று கோபம், பொறாமை, பொய், தான் மட்டுமே எல்லாமும் எனப்படும் ஈகோ போன்ற குணங்கள் என்று கூறினார். அப்போ, இதில் எந்த விலங்கு ஜெயிக்கும் என்று கேட்டான் சிறுவன். தாத்தா நீ எதற்கு உணவு கொடுக்கிறாயோ அதுவே ஜெயிக்கும் என்றார். நாம் எப்பொழுதும் நல்லவற்றையை நினைப்போம், செய்வோம். நல்லதே நடக்கும்.



சரவணன் (வயது 14)
ஞவுந்தொம்பின்

ஔவையாரிடம் மூன்று பிடிக்கும்

ஔவையார் என்று சொல்லுக்குத் தவப்பெண் என்ற பொருளும் உண்டு. ஔவையார் பல நூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் எனக்குப் பிடித்த நூல் ஆத்திசூடி. ஏன் பிடிக்கும் என்றால் அதில் உள்ள மூன்று கருத்து தான் காரணம். அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம், இளமையில் கல் என்ற மூன்று கருத்துக்கள் தான் எனக்கு மிகவும் பிடிக்கும்.



ம.ஸ்ரேயா (அகவை 16)
டல்லா

விவசாயம்

நான் இப்பொழுது சொல்லப் போகிற செய்தி நெல்லைப் பற்றி. நெல்லரிசியைத்தான் நம் தினம் சாப்பிடுகின்றோம். நெல் வயலில் முளைக்கிறது. அது விவசாயத்தால் விளைக்கிறது. அந்த விவசாயத்தை நம் தமிழர்கள் தான் கண்டுபிடித்தார்கள். நான் இப்போது சொல்ல வந்தது, தமிழனால் தான் மொத்த உலகமும் இன்று சாப்பிடுகிறார்கள். அதனால் நம் விவசாயமே உலகத்திற்கு முக்கியம்.



சஞ்ஜேகுமார் (அகவை 14)
ஞவுந்தொம்பின்

அகம்

வானம் நான், நிலா நீ
நிலவே ஒளியே என்னவளே
உனக்கே உயிரை நான் தருவேன்
உன்னைப் பார்த்தபோதிலை
என்னை நானே மறந்தேனே
எனக்கு நீயே விழியாவாய்
உனக்கு நானே வழியாவேன்
உன்னை நினைக்கும் போதிலே
என் மனம் பஞ்சாய்ப் பறக்கிறதே
உன் விழியில் விழுந்த என்னை
மீட்டுத் தருவாயா என் காதலியே



ச. அறவேணி (வயது 16)
டல்லா

வெள்ளி வானம்

வெள்ளிப் போர்வை போர்த்தினாயே
மேகமாலை சூட்டினாயே
இன்ப மழை பொழிந்தாயே
புயல் நீ என்றாலும் தென்றல் தான் தாயே
காற்றில் மொட்டுக் கட்டியே
குழந்தையைப் போல ஆனேனே
இயற்கை வளமே என் அழகே
பச்சை வண்ணம் தருபவளே



ம.ஐஸ்வர்யா (வயது 14)
டல்லா

மின்னல் விளக்கு

மின்னலே மின்னலே அழகொளியே
உன் ஒளி தோன்றுவது ஒரு நொடியே
உன் அழகைக் கொண்டே அச்சமூட்டுகிறாயே
நீ வெள்ளை என்றாலும் கருமேகத்தில் விழிக்கிறாயே.



ம.ஸ்ரேயா (வயது 16)
டல்லா

என் தமிழே

தமிழே தமிழே என் தமிழே
அன்பே நீதான் என் தாயே
அமிழ்தே நீதான் மன நிறைவே
அறிவே பண்பு என்றாயே
அழகே அழகாய் உள்ளாயே
இசையாய் நெஞ்சில் நின்றாயே
எல்லா இடமும் நீ தானே
எங்கும் பூத்து நின்றாயே



அழகன் (வயது 13)
நந்தாகொன்

மொழி

பொன்மொழி
நன்மொழி
எப்போதும் இளமையாக உள்ளமொழி
உலகில் எங்கேயும் இல்லை இது போன்று ஒருமொழி
தமிழ்மொழியே நம் கருவிழி



வே.மோனிஷா (வயது 12)
யாங்கோன்

அறிவு

அறிவே மதியே நம்மழகே!
படிப்பே நமது தனிச்சிறப்பே!
வாழ்வும் சாவும் வரலாறே!
ஞாலத்தை மாற்றநீ துணிவாயே!
அகமும் புறமும் செழித்திடவே!
தினமும் நன்மை செய்வாயே



அருண் (வயது 19)
டல்லா

தமிழே

தமிழே தமிழே என் தமிழே
மொழியே மொழியே தாய்மொழியே
உயிரின் உயிராய் ஆனாயே
குரலே குறளே புதுப்பொருளே
அறிவாய் எங்கும் நின்றாயே
அழகே அழகே புது அழகே
துணையாய் எனக்கு நின்றாயே
மனமே மனமே நீ பாடு
தமிழே தாய் என்று நாடு



கா.அஷோக் (அகவை 14)
ஞவுந்தொம்பின்

என் செல்லச்சிங்கக்குட்டி

சிங்கமே சிங்கமே
வீரமுள்ள சிங்கமே
தங்கமே தங்கமே
நீ தா என் தங்கமே
இன்பமே இன்பமே
செல்லமே நீ இன்பமே
விட்டுவிடு விட்டுவிடு உன்
கெட்டகுணத்தை,
ஒன்றாய் இருக்கணும்
மற்றவரிடத்தில்



சி.பாண்டியன் (அகவை 12)
டல்லா

என் குயிலே

குயிலே குயிலே
அழகான குயிலே
இனிமையான குரல் உள்ள குயிலே
உன் குரலைக் கேட்டால் மனம் உருகுமே
உன் இசையைக் கேட்டால் சந்தோஷம் வருமே
உன்னைப் போலக் குரல் ஒன்று
உள்ள பறவை ஏதும் இல்லையே



ச.சத்தியா (வயது 12)
டல்லா

வாழ்க பெண்ணே!

சிங்கப் பெண்ணே
சிறந்த பெண்ணே
படிப்பில் சிங்கமாக
குணத்தில் தங்கமாக
அழகில் நிலவாக
அறிவில் நிலையாக
பொறுமையில் புவியாக
புதுமையில் தமிழாக
இல்லத்தில் எல்லாமுமாக
எங்கும் நிலைக்கிறாய்!
நீதான் என்றும் தெய்வப்பிறவி!



கு.நந்தகுமார் (அகவை 12)
டல்லா

அன்பு

அன்பு என்பது ஒருவர் மேல் ஒருவர் பாசமாய் இருப்பது என்று கூறலாம். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள், குழந்தைகளிடம் "அன்பு வந்து எல்லோர் கிட்டயும் இருக்கும். ஒருத்தர் மேல் பாசம் பொங்குவது அன்பு என கூறுவார்கள். குடும்பத்தில் ஒருத்தர் மேல் பாசமா இருப்பதற்கு அன்பு என குறிப்பார்கள். குழந்தைக் காலத்தில் தன் நண்பர்களிடம் அன்பாக இருக்கணும்.அன்பு என்பது தமிழ்மொழியில் அழகான ஒரு மொழி. தமிழ் நாட்டில் பெரியவர்கள் சொல்லி மொடுத்த மொழி அன்பு. அன்புக்கு இனம் தேவை இல்லை, மனம் தேவை இல்லை, நிறம் தேவை இல்லை மனசு இருந்தால் போதும்." என்று சொல்லிப் புரியவைப்பார்கள்.



கா.அஷோக் (அகவை 14)
ஞவுந்தொம்பின்

எல்லாரும் நன்றாக வாழ்கின்றோம்...

அம்மா எப்போதும் அன்பாய் இருப்பாள்
அப்பா எப்போதும் பாசமாய் இருப்பார்
நண்பன் எப்போதும் படிப்பைச் சொல்லிக்கொடுப்பான்
அண்ணன் என்னிடம் தமிழில் பேசுவான்
எல்லாரும் நன்றாக வாழ்கின்றோம்....



தமிழ்ச்செல்வி (அகவை 9)
டல்லா

தமிழ்மொழிப் பயிற்சி மற்றும் படைப்பாக்கப் பயிலரங்கின் குழுப்படம்

